1982 மார்ச் 20]

வருகின்றது என்று சொன்னார்கள். அப்படி இருந்தும் படித்து பட்டம் பெற்றவர்கள் மட்டுமல்லாமல் படிக்காதவர்கள் கூட கூட்டுறவு அமைப்பின்கீழ் வந்தால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும் சொன்னார்கள். அந்த ரீதயிலே ஏற்படுத்தி இப்போது இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வேலைவாய்ப்பற்ற மக்களுக்கு முதலில் உதவி செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அரசு செய்யும்.

கூடலூர் தாலுகாவில் அரசுத் துறையில் தேயிலையை அடைக்கும் பெட்டிகள் செய்யும் தொழிற்சாலையை நிறுவும் திட்டம்.

வினா. எண். 566—திரு. கு. ரமணி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிபாரா—

(அ) நீலகிரி மாவட்டம்—கூடலூர் தாலுகா அரசுத் துறையில் தேயிலையை அடைக்கும் பெட்டிகளைச் செய்யும் (Plywood) தொழிற்சாலையை நிறுவ போடப்பட்டுள்ள திட்டம் செயல்பட ஆரம்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுதிலிருந்து தொழிற்சாலை உற்பத்தி ஆரம்பிக்கும் ?

(இ) எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தமிழ்நாடு ஒட்டுப்பலகை மற்றும் வினியர்ஸ் தொழிற் கூட்டுறவு தொழிற்சாலை லிமிடெட் பந்தலூரில் 31–3–80-ல் பதிவு செய்யப்பட்டு அதற்குத் தேவையான 10 ஏக்கரா நிலம் நீலகிரி மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

(ஆ) ஒரு ஆண்டிற்குள் இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான கட்டிடம் கட்டி இயந்திரங்கள் நிறுவப்பட்டு உற்பத்தி துவங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இத் திட்டம் 53 பேர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்பு அளிக்கும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்தத் தொழிற் சாலையினுடைய திட்டத்திற்கு நீண்ட நாட்களாக ஆலோ சனை செய்து, திட்டம் ஒத்துக் கொள்ளப்பட்டு பின் நடை முறைக்கு வராமல் தாமதப்படுகிறது. அதைத் துரிதப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுப்பதோடு இந்த ப்ளைவுட் கொண்டு தேயிலை அடைக்கும் பெட்டிகளைத் தயார் செய்வது மட்டுமல்லாமல் வேறு ஏதாவது வேலைகளுக்கும் அந்தத் தொழிற்சாலையில் நடைபெறுவதற்கு திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல அந்த பந்தலூர் கிராமத்தில் இந்தத் தொழிலை நிறுவதற்கு திட்டமிட்டபோது அந்தப் பகுதி சதுப்பு நிலமாகவும் சாக்கடை ஓடுகின்ற இடமாகவும் இருந்ததால் அங்கிருந்து 7 கிலோ மீட்டருக்கு அப்பால் தோவாலா கிராமத்தில் நிறுவ முடிவு செய்து, ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் அல்லது மூன்றாவது, வாரத்தில் தொடக்க விழா நடக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் குறிப்பிட்ட தொழிற்சாலை யில் இன்றைய தினம் 3 இலட்சம் ஒட்டுப்பலகை ''ப்ளைவுட்'' பெட்டிகள் செய்யவும் அதோடு தீப்பெட்டி குச்சிகள், அட்டை கள், 5 இலட்சம் ரூபாய் அளவுக்கு உற்பத்தி செய்கிற இணைத் தொழில் முயற்சியும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்திருக்கக் கூடிய பதிலிலிருந்து ப்ளைவுட் பெட்டிகள் ஏராளமான அளவுக்கு உற்பத்திச் செய்யப்படும் என்று தெரி கிறது. ஆனால் வேலை வாய்ப்பு மட்டும் இவ்வளவு குறைந்த அளவுக்கு, 50 பேர்கள் என்ற அளவுக்கு மட்டும் இருப்பதற்கு என்ன காரணம்? அதிகப்படியான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற குறிப்பில் இந்த விவரம் இருக் கிறது மேலும் விவரங்கள் வேண்டுமானால் தனியாக உறுப் பினர் அவர்களுக்கு அறிவிக்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, கடந்த ஜூன் மாதத்திலே அந்த பந்தலூரில் ப்ளைவுட் பெட்டிகள் செய்யும் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுகிற விழாவுக்கு அமைச்சர் வருகிறார் என்று பல பத்திரிகைகளில் செய்தி வெளியிடப் பட்டது. நீலகிரி மாவட்டத்தில் எல்லோருக்கும் தெரியும் அப்படி இருந்தும் ஜூன் மாதம் ஏன் அடிக்கல் நாட்டவில்லை என்ற காரணத்தை அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 20]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல அந்த இடத்தில் தொடங்குவதாக இருந்தது. ஆனால் அந்த இடம் எந்த இலாகாவுக்குச் சொந்தம் என்பதிலே பிரச்சனை எழுந்து, குறிப்பாக அந்த இடம் வன இலாகாவுக்குச் சொந்த மானாதா அல்லது வருவாய்த் துறைக்குச் சொந்தமானதா என்ற பிரச்சனை ஏற்பட்டு, வன இலாகா என்று கருதி அதற்கு மத்திய சர்க்காரிடம் ஒப்புதல் பெறுவதற்கு சிக்கல் இருந்த காரணத்தால் சிக்கலை வைத்துக்கொண்டு தொழிற் சாலையைக் தொடங்கக்கூடாது, சந்தேகத்தோடு தொடங்கக் கூடாது என்று கருதி எச்சரிக்கையாக இருக்கக் கருதி, அந்த இடத்திற்கு நானே சென்ற பிறகு, சந்தேகம் என்ற பிறகு, நடத்தக் கூடாது என்று கருதி, பிறகு அரசு சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்து, வருகின்ற ஏப்ரல் மாதம் அந்தத் தொழிற் சாலை முழுமையாகத் தொடங்கப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் ஒட்டுப்பலகை தொழிற்சாலை ஆரம்பிப்பதற்காக நன்றி கூறிக்கொள்கிறேன். அந்த தொழிற் சாலையை குறுகிய காலத்தில் கட்டிமுடிக்க அங்கே 'கன்ஸ்ட் ரக்ஷன்' பிரிவு இல்லை என்ற காரணத்தால், அங்கே ஒரு 'சப்-டிவிஷன்' ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு, அந்தத் தொழிற்சாலையை விரைவாகத் தொடங்க அரசு ஆவன செய்யும்.

Tirunelveli–Tuticorin Road as a National Highway.

* Q. No. 567—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether the Tirunelveli–Tuticorin Road is to be made a National Highways;

(*b*) whether the Central Government are to widen the road; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. பா. குழந்தைவேலு : *(அ), (ஆ) மற்றும் (இ)* திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு பாளையங்கோட்டை வழியாகச் செல்லும் சாலை தற்போதுள்ள தேசிய நெடுஞ் சாலையாகும். திருநெல்வேலியிலிருந்து பாளையங்கோட்டை